# தனியார் மயமாக்கம் ஒரு தேசத்துரோகம்




K. அசோக்ராவ்

- முதற் பதிப்பு : மே, 1995

- ஆசிரியர் : K. அசோக்ராவ்

- மூலநூல் வெளியீடு : PIRG. DELHI

- தமிழாக்கம் வெளியீடு : பெல்-பைப்பிங் சென்டர் ஸ்டாஃப் யூனியன் (PCSU) தியாகராய நகர், சென்னை-17

- அச்சு : எழில் பிரிண்ட்ஸ், சென்னை-24

- நூல் கிடைக்குமிடம் : கீழைக்காற்று வெளியீட்டகம் 10, ஔலியா சாகிபு தெரு எல்லீசு சாலை, சென்னை-2.

- விலை : ரூ. 4.00

- நன்றி

ஓவியங்களுக்கு பயன்பட்ட நூல்கள்:
LIKE SKULL IN THE SKY - JANASAHITHI - A.P.
THIN BALCK LINE - PIRG, DELHI

# பதிப்புரை

'இந்தியா முன்னேறிச் செல்கிறது' என்று எல்லாப் பக்கங்களிலும் விளம்பரம் செய்கிறது, அரசாங்கம். ஆனால் எந்தத் திசையில் என்று பார்த்தால்?! நாட்டை - அடகு வைக்கும் திசையில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நிரூபணமாகிறது. 'வந்தே மாதரம்' என்று சொல்லி இவர்கள் இட்டுக்கட்டி இழுத்துவந்த சுதந்திரம் 'வாங்க - விற்க' என்று வட்டிக்கடை முழக்கமாய் ஓங்கி ஒலிக்கிறது.

பன்னாட்டு மூலதனங்களுக்கும், தொழிற்கழகங்களுக்கும் அகலக்கதவு திறக்கும் ஆட்சியாளர்கள், இந்நாட்டையே ஏலம் போடத் துணிந்து விட்டார்கள். இதன் தொடர்ச்சியாகத் தான் நாட்டின் பொதுத் துறையை, தனியார் மயமாக்க 'சுதந்திர' வேட்கையுடன் அலையாய் அலைகிறார்கள். இதற்கான திடலடி வேலைகளையும், தில்லுமுல்லு வாதங்களையும் அரசு எவ்வளவு அக்கறையாக செயற்படுத்துகிறது என்பதனை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது, இச்சிறு வெளியீடு. மைய அரசின் பொதுத்துறை அலுவலர்கள் சங்கங்களின் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், **K.** அசோக்ராவ் அவர்கள் எழுதி -பப்ளிக் இண்ட்ரஸ்ட் ரிசர்ச் குருப் ஆங்கிலத்தில் வெளியிட்ட கட்டுரையின் தமிழாக்கம் இவ்வெளியீடு.

திரு. K. அசோக்ராவ் அவர்கள், BHEL அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எமது வெளியீடான "BHEL ஐ அழிக்கும் தேசத்துரோகக் காங்கிரசின் புதிய மின் கொள்கை" என்ற நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நூலும் பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் நாட்டுப் பற்றாளர்கள் அனைவரின் வரவேற்பையும் பெறும் என்று நம்புகிறோம்.

— சு. தங்கராசு, பொதுச்செயலர்,


BHEL பைப்பிங் சென்டர் ஸ்டாஃப் யூனியன், சென்னை - 17.

# தனியார்மயமாக்கம் ஒரு தேசத்துரோகம்

இப்போது நாட்டில் சூறைக்காற்று போல் ஓங்கி வீசும் சீர்த்திருத்தங்களின் விருப்பமான இலக்காக இந்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் விளங்குகின்றன. அடுத்தடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்புகள் தொடர்ச்சியாக வெளியாகின்றன. அவசர அறிவிப்புகளைப் புரிந்து கொள்வதே கடினமாக உள்ளது. விளைவுகளைப் பற்றிய மதிப்பீடுகள் எதுவுமே இல்லாமல் அறிவிப்புகள் மட்டும் தொடர்கின்றன. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தின் வழிகாட்டுதலில் திடலடியாகப் பின்பற்றப்படும் கொள்கைகள், மூலதன உற்பத்தித் தொழிலை பெருமளவில் உள்ளடக்கி உள்ள இந்திய பொதுத்துறை நிறுவனங்களை ஒழித்துக்கட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளன. இதன் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதன உற்பத்தித் தொழிலில் தங்குதடை இன்றி நுழைய வழி செய்யவே இந்த உத்தி. கட்டமைவுச் சீரமைப்புக்கான கடனாகப் பெறும் அற்பத்தொகை 50 கோடி டாலருக்காக உலக வங்கியின் அனைத்து நிபந்தனைகளையும் அரசாங்கம் ஏற்றுள்ளது.

காதும் காதும் வைத்தாற்போல் சந்தடியின்றி மாற்றங்கள் செய்யப்படும் முறை மிகமிகக் கவலை அளிக்கும் விசயமாகும். 1992-93 நிதி ஆண்டுக்கான மத்திய அரசாங்க வரவு செலவு அறிக்கை அந்நிய நிறுவனங்களுக்கு முன்கூட்டி தெரிவிக்கப்படவில்லை என்ற உத்திரவாதத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி அமைச்சரிடம் கோரி

னார்கள்; இவ்வாறு கோர வேண்டிய அளவுக்கு நடவடிக்கைகள் இரகசியமாக இருந்தன. இது தொடர்பான விசயங்களில் இக்கட்டான நிலைமைகளில் அரசாங்கம் சிக்கும்போதெல்லாம், எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு, அவை ஆதாரமற்றவை அடிப்படையற்றவை என்று அரசாங்கம் மறுப்பதில் முடிகிறது. அல்லது இந்தியப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நிகழ்ச்சிப் போக்கில், மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் படைப்பாற்றலுடனும், ஆக்கப்பூர்வமாகவும் பங்களிக்க ஏராளமான வாய்ப்புகள் அளிக்கப்படும், அதன் பின்னரே எந்த மாற்றமும் செய்யப்படும் என்ற உறுதிமொழிகள் அளிப்பதில் முடிகிறது.




ஒரு சந்தர்ப்பத்தில், ஓர் அரங்கில் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் பற்றி பொது முடிவுகள் எடுக்கப்பட மாட்டாது, ஒவ்வொரு நிறுவனமும், தனித்தனியாகவும் முழுமையாகவும் பரிசீலிக்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளிக்கிறது. அரசாங்கத்தின் வேறு சில உறுப்பினர்கள் - சில சந்தர்ப்பங்களில் அந்நிய நாடுகளில் இருக்கும் போது - வெளியிடும் அறிக்கைகளோ, பல சந்தர்ப்

பங்களில் முரண்பட்டவையாக உள்ளன. முன்னாள் வாணிப அமைச்சர் ப. சிதம்பரம் 58 நலிவடைந்த நிறுவனங்கள் மூடப்படும் என்று அமெரிக்காவில் அறிவித்தார்; பொதுத்துறை நிறுவனங்களில் 49 சதவிகிதப் பங்குகள் வரை முதலீடு செய்ய அந்நிய முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று டோக்கியோவில் நிதி அமைச்சர் அறிவித்தார். இவ்விரு அறிவிப்புகளும், மக்கள் மனதில் மறக்க இயலாதவாறு பசுமையாக உள்ளன. அரசாங்கத்தினுடைய சமீபத்திய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, இத்தகைய அறிக்கைகள் தான், மக்களுக்கு அளிக்கப்படும் உறுதிமொழிகளைக் காட்டிலும், உண்மையாக உள்ளன. இது துரதிருஷ்டமாகும்.

## மாறுதல்கள்

கடந்த ஓராண்டில் சீர்திருத்தங்களின் பிரதான திசையாக இருப்பது தெரிந்தெடுத்த, லாபகரமான பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதாகும். அரசாங்கத்தின் வருவாய் பற்றாக்குறையை ஈடுகட்டுவது என்ற பெயரில் இவ்வாறு செய்யப்படுகிறது. மக்களின் உடைமைகளை, உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தின் ஆணைப்படி, அற்ப விலைக்கு மத்திய சிறுபான்மை அரசு எத்தகைய சிரத்தையுமின்றி விற்றுத் தள்ளுகிறது. இம்முடிவுகள் பொருளாதார, நீதிநெறி மற்றும் அரசியல் தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகளை எழுப்புகின்றன. பொது நிறுவனங்கள் கமிட்டியின் வாயிலாக, நாடாளுமன்றம் பொதுத்துறையின் நடவடிக்கைகளை கண்காணிக்கிறது. ஆனால் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது மற்றும் பொதுத்துறை நிறுவனங்களைக் கலைக்கும் அடுத்தடுத்த பல்வேறு நடவடிக்கைகளில் நாடாளுமன்றத்துக்கு ஊக்கமான, நோக்கமுடைய, குறிப்பான பாத்திரம் ஏதுமில்லை இது புரிந்து கொள்ளக் கடினமானதாக இருக்கிறது.

இம்முடிவுகள் தொடர்பாக பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்தாலோசிக்கப்படவும் இல்லை. இவற்றில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கானவர்களின் வேலையையும் வாழ்க்கையையும் இம்முடிவுகள் பாதித்தே தீரும். சில மத்திய தொழிற்சங்கங்களின் தேசியத் தலைமையுடன் ஆலோ

சனைகள் என்ற பாவனைக் காட்டப்படுகிறது. ஆனால் இவை சிரத்தையுடன் நடத்தப்படுவதாக யாருமே கருத முடியாது.


மொத்த நாட்டையும், மக்களையும் கடுமையாகப் பாதிக்கும் இந்த குறுகிய நோக்குக் கொள்கைகள், எச்சரிக்கையான ஆய்வுக ளையும் அவற்றின் அடிப்படையிலான மாற்றுத் திட்டத்தையும் ஆயத் தூண்டுகின்றன. ஆனால் இவ்விசயத்தை இப்போதைய ஆட்சி அக்கறையுடன் காண மறுக்கிறது. பொதுத்துறையின் உற் பத்தி, உற்பத்தித் திறன், செல்வ உற்பத்தி ஆகியவை தொடர்பாக அரசாங்கத்தினுடைய முடிவுகளிலிருந்து எழும் சிக்கலானப் பிரச்சி னைகளை, கிடைக்கக் கூடிய தகவல்கள் அடிப்படையில், பரிசீ லிக்க நாம் முயல்வோம். இந்தியா போன்றதொரு வளரும் நாட் டில் பொதுத்துறை வகிக்கும் பாத்திரம், நாட்டின் சுயசார்பு பொரு ளாதாரத்திற்கான அதன் பங்களிப்பு ஆகியவை பற்றி உருவரையை முன்வைப்பது; நாடு தொழில்மயமிழத்தலை நோக்கி வீழ்வதைத் தடுப்பதில் பொதுத்துறை ஆற்றக் கூடிய நியாயமான பாத்திரத்தைச் சுட்டிக் காட்டும் மாற்று உத்திகளைக் கூறுவது - இவற்றுக்கான முயற்சியே இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

## பொதுத்துறை நிறுவனங்களைத் தாரை வார்ப்பது

கணக்குப் பதிவேட்டின்படியான பொதுத்துறை நிறுவனங்க ளின் சொத்து மதிப்பு ரூ.1,13,234 கோடி. இச்சொத்து இந்நாட்டு மக்களின் கூட்டுச் சொத்தாகும். இதுவரை இவற்றை விற்பது என் பது, அடிமாட்டு விலைக்கே நடந்துள்ளது. எந்த ஒரு நீதிமன்றமும் இந்த விலை செல்லுபடியாகாது, பரந்து பட்ட இந்திய மக்களின் நலன்களுக்கு கொடுமை விளைவிப்பது என்றே கூறும். உண்மை யில் இச்சொத்து இந்திய மக்களின் வியர்வையாலும், இரத்தத்தா லும் உருவானதாகும்.

இப்போதைய விலைகளில் பொதுத்துறை நிறுவனங்களின் மாற்றீட்டு (replacement) மதிப்பு ஆரம்ப முதலீட்டைக் காட்டிலும் நூறு மடங்குக்கும் மேலாக இருக்கும். மக்களுக்கு உரிமையான சொத்துக்களை விற்பதற்கு, அதிலும் கணக்குப் பதிவேட்டின் படி யான விலைக்கு விற்பதற்கு அரசாங்கத்திற்கு என்னதார்மீக உரிமை

உள்ளது? என்பதே முதல் கேள்வி. சந்தை மதிப்பைவிடக் குறைவான விலையில் ஈக்விட்டி பங்குகளை பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பதில் அளவு கடந்த அக்கறை காட்டுகிறது. மாருதி (கார் நிறுவனம் - மொ.ர்.) நிறுவனப் பங்குகள் சுசுகி நிறுவனத்திற்கு விற்கப்பட்டது இதற்கு எடுத்துக் காட்டு. பல இடங்களில் உள்ள பல்பொருள் உற்பத்தி நிறுவனங்களான பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் ஆகியவற்றைத் தனியாருக்குத் தாரை வார்க்க திட்டங்கள் உள்ளன. இதிலும் ஒவ்வொரு ஆலையையும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தங்கத் தட்டில் வைத்து தானம் செய்ய திட்டங்கள் உள்ளன. இறுதியில் தரப்பட்டுள்ள அட்டவணைப் பங்குகள் விற்கப்பட்டுள்ள நிறுவனங்கள் எந்த அளவுக்கு விற்கப்பட்டு உள்ளன, அவற்றின் நிதி நிலைமை பற்றிய விவரங்களைக் காட்டுகிறது.




பொதுத்துறை நிறுவனங்கள் துறையின் தகவல்படி 1991-92-ல் 31 பொதுத்துறை நிறுவனங்களில், பங்குகளின் விற்பனை மூலம் கிடைத்த தொகை ரூ.3088 கோடி. அவ்வாறு விற்கப்பட்ட நிறுவனங்களின் நிகர லாபம், அவற்றின் ஏகபோகத் தன்மை, தொழிலின் இயல்பு, அவற்றின் ரிசர்வுகள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டுப் பார்த்தால், இவற்றின் ஈக்விட்டி பங்குகளை விற்பதன் மூலம், மிகவும் குறைந்த மதிப்பீட்டின் படியே கூட, ரூ.24,000 கோடி கிடைத்து இருக்க வேண்டும்!

இவ்வாறு பகுதியளவு விற்கப்படும் நிறுவனமொன்றின் பருண்மையான எடுத்துக்காட்டு ஐயத்துக்கு இடமின்றி நிரூபிப்பது என்னவென்றால், அவற்றை வாங்கிய புதிய உடைமையாளர்கள் அவற்றை இனாமாக வாங்கிக் கொண்டனர் என்பதுதான். ஏனெனில் அவர்கள் முதலீட்டுக்கு இரு மடங்கு மதிப்புடைய ரிசர்வுகள் உடையவையாக அந்நிறுவனங்கள் உள்ளன. பாரத் பெட்ரோலியம் கெமிக்கல்ஸ் லிமிடெட்-ஐப் பொருத்தவரை அதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.50 கோடி, அதனுடைய ரிசர்வ் ரூ.616.11 கோடி. அதன் ஈக்விட்டி பங்குகளில் முதலீடு செய்தவர்கள் ரூ.300 கோடிக்கும் குறைவாக கொடுத்து ரூ.600 கோடிக்கு மேல் ரிசர்வ் உடைய நிறுவனத்தை வாங்கி விட்டனர். எனவே, இம்முறையிலான விற்பனைகள் இந்நாட்டு மக்களை மோசடி செய்வதாகும்.

## புதிய உடைமையாளர்கள் யார்?

நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதுதான், இவ்வாறு நிறுவனங்களின் பங்குகளை விற்பதற்கு நோக்கமென்றால், அரசாங்கமானது அந்த பொதுத்துறை நிறுவனங்களின் இருத்தி வைக்கப்பட்ட லாபத்தை எளிதாகத் திரட்டிக் கொண்டு, அவற்றின் பங்குகளை விற்காமலேயே இருந்திருக்கலாம். லாபமீட்டிய நிறுவனங்கள் டிவிடெண்ட் போக 1990-91-ல் ஈட்டிய லாபம் ரூ.5167 கோடி. இந்த உத்தி கடைபிடிக்கப்பட்டு இருந்தால், அது, அந்நிறுவனங்களின் எதிர்கால லாபங்களை பாதித்து இருக்காது.

எனவே, இவ்வாறு செய்யப்படாமல், நிறுவனங்களின் ஈக் விட்டி பங்குகளை விற்பது ஏன் தெரிவு செய்யப்பட்டது என்பது, மிகச் சந்தேகத்திற்குரிய வினாக்களை எழுப்புகிறது. இந்த விற்பனைகளால் உண்மையில் ஆதாயமடைந்தவர்கள் யார்? நிச்சயமாக, இந்திய மக்கள் அல்ல. எதிர்காலத் தலைமுறையினரின் நன்மைக்காக பொதுத்துறையில் முதலீடு செய்து மகத்தான தியாகங்களைச் செய்தவர்கள் இந்திய மக்களே (பல மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் பொதுத்துறை நிறுவனங்களுக்காக பெயருக்கு ஒரு ரூபாய் பெற்றுக்கொண்டு தமது நிலத்தைக் கொடுத்தனர். இவை நாட்டின் சொத்தாக நீடிக்கும் என்ற நம்பிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு செய்தனர்.) அந்தோ! அவர்களுக்கு நம்பிக்கை மோசடி செய்யப்பட்டு விட்டதே!




பரஸ்பர நிதி அமைப்புகள் (பங்குகளில் - மொ.ர்.) ஊக வாணிபம் செய்வதாக குற்றச் சாட்டுகள் உள்ளன. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை வாங்கும் வங்கிகள் உண்மையில், பன்னாட்டு வங்கிகள் மற்றும் தொழிலகங்களின் கையாட்களாகவே

செயல்படுவதாக குற்றச் சாட்டுகள் இருந்தன. பல்லாயிரம் கோடி பங்கு பத்திர ஊழல் அம்பலப்பட்டதன் விளைவாக, இந்தச் சூதாட்டம் முழுமையடைவதற்கு முன்பே தடைபட்டு விட்டது; இத்தகைய குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டதில் வியப்பு ஏதுமில்லை.

அரசாங்கத்துக்குச் சொந்தமான பரஸ்பர நிதி அமைப்புக்களுக்குத்தான் பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகள் விற்கப்பட்டு உள்ளன; இவ்வாறு விற்கப்பட்டதால் கிடைக்கக் கூடிய எதிர்பாராத லாபங்களும் தேசிய மயமாக்கப்பட்ட நிறுவனங்களுக்கே கிடைக்கின்றன; எனவே அபாய அறிவிப்புக்கு இடமே இல்லை என்று வாதிக்கப்படுகிறது. இது உப்புசப்பற்ற வாதம். பொதுத் துறை நிறுவனங்கள் இந்தியர் அனைவருக்கும் சொந்தமானவை, ஆனால் பரஸ்பர நிதி அமைப்புகளின் லாபங்கள் அதில் முதலீடு செய்து உள்ளவர்களுக்கு மட்டுமே சொந்தம். சீர்த்திருத்தங்கள் பற்றிய நரசிம்மம் கமிட்டி, நிதித்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது; இது நடைமுறைப்படுத்தப்படுமானால், பொதுத்துறை நிறுவனங்களை விற்பதால் தனிப்பட்டவர்களுக்கும், பன்னாட்டு வங்கிகளுக்குமே நேரடியாக லாபம் கிடைக்கும்.

இந்தியப் பங்குச் சந்தையின் முதலீட்டு உள்ளிழுப்புச் சக்தி மிகவும் வரம்புக்குட்பட்டது. இதனால் விற்கப்படும் பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகள் மிக எளிதாக பன்னாட்டு நிறுவனங்களின் கைக்குப் போய்விடும். இது ஏதோ வெறும் அச்சமல்ல, உண்மையில் நடக்க கூடியதே. பங்குச் சந்தை ஊழலில் பன்னாட்டு வங்கிகள் முழுமையான அளவில் ஈடுபட்டது இதை பலமாக உறுதிப்படுத்துகிறது; விசயங்கள் எந்த திசையில் செல்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

இந்தியப் பங்குச் சந்தையின் முதலீட்டு உள்ளிழுப்புச் சக்தியின் போதாமையுடன் வேறொரு அச்சுறுத்தும் காரணியும் உள்ளது. எண்பதாம் ஆண்டுகளில் பொதுத்துறை நிறுவனங்கள் அந்நிய வர்த்தக வங்கிகளில் கடன்கள் வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டன

என்ற விசயமே அது. (வாஷிங்டனில் உள்ள சர்வதேச நிதிக் கழகத்தின் மதிப்பீட்டின்படி, பொதுத்துறை நிறுவனங்கள் 1980-ல் அந்நிய வர்த்தக வங்கிகளில் பெற்ற கடனின் அளவு 30 கோடி டாலர்; ஆனால் 1987-ல் இதன் அளவு 1200 கோடி டாலர்.) உயரிய நிதி நிலைமையிலிருந்த பொதுத்துறை நிறுவனங்கள் எண்பதாம் ஆண்டுகளில் அந்நிய வர்த்தகச் சந்தைகளில் கடன்கள் வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டன; தமது சொந்த அந்நியச் செலாவணித் தேவைகளுக்காக அல்லாமல், நாட்டின் அந்நிய வர்த்தகப் பற்றாக்குறையைச் சமாளிக்கவே கடன் வாங்கின.

முழு உண்மை விவரங்கள் வெளியாகாத போதிலும் எண்பதாம் ஆண்டுகளில் அரசாங்கம் செய்த ஊதாரிச் செலவுகளை ஈடுகட்டவே இது உதவிற்று. பொதுத்துறை நிறுவனங்களின் இக்கடன்கள் ஈக்விட்டி பங்குகளாக மாற்றப்படுமா என்பதே இப்போதைய முக்கிய கேள்வி. பிரேசில், மெக்சிகோ, சிலி, அர்ஜென்டினா ஆகியவற்றில் அனுபவம் காட்டுவது என்னவெனில், இக்கடன்கள், கடன் வழங்கியவர்களின் ஈக்விட்டி பங்குகளாகும் என்பதும், இவை, பின்னர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பன்னாட்டு நிறுவனங்களின் கைகளைச் சென்றடைந்து விடும் என்பதுமே. பொருளாதார புனர் நிர்மாண அமைப்பு (OECD), மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இந்நாடுகளில் கடன்-ஈக்விட்டி மாற்றும் முறைகளில் தொழிற் துறையில் பெரும் பங்கை தமது உடைமையாக்கி கொண்டு விட்டன.

இந்திய தொழில் நிறுவனங்களே அனைத்துப் பங்குகளையும் வாங்கிக் கொள்வதாக வைத்துக் கொண்டாலும் கூட, விசயம் கவலைக்குரியது என்பது மாறிவிடப் போவதில்லை. 1950-51 முதல் 1990-91 வரையிலான ஆண்டுகளில் இவை குவித்துள்ளது போன்ற செல்வக்குவிப்பை இந்திய அரசியல் சட்டம் அனுமதிக்கிறதா? இந்தியாவினுடைய பெரு நிறுவனங்களின் சொத்து உயர்வோ பிரம்மாண்டமானது (சிலவற்றின் சொத்து உயர்வு 72.296 சதவிகிதமாகும்), ஆனால் நாட்டின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 3 சதவிகிதத்துக்கும் குறைவே.

## தகவல் அறிவதற்கான மக்களது உரிமை

சமீபத்தில் விற்பனைக் கொள்கையின் நோக்கங்கள், இவற்றின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட விற்பனைகள் பற்றிய ஆழமான விசாரணைகளே விசயங்களைத் தெளிவுபடுத்த முடியும். நிதிப்பற்றாக் குறையை ஈடுசெய்ய பொதுத்துறை நிறுவனங்களை விற்பது என்று முடிவு எடுப்பதற்கு முன் வேறு என்ன மாற்று வழிகள் பரிசீலிக்கப்பட்டன என்பது பற்றிய விவரங்களை அறிய இந்திய மக்களுக்கு உரிமை உண்டு. விற்பனை செய்யப்பட்ட நிறுவனங்களின் சொத்துக்களை மதிப்பிட என்ன அளவீடுகள் கடைபிடிக்க? அவற்றை விற்பது என்று முடிவெடுப்பதற்கு முன் அவை ஏன் மறு மதிப்பீடு செய்யப்படவில்லை? இன்னும் பதிலளிக்கப்படாத இத்தகைய பல கேள்விகளைப் பற்றி அறிய இந்திய மக்கள் உரிமையுள்ளவர்கள்.



தனியார் மயம்:
தனியாத பசிக்கு
இரையாகும் தொழிலாளர்கள்

கடந்த ஜூலையில் மைய அரசு பொதுத்துறை நிறுவன அதிகாரிகள் சங்க கூட்டமைப்பு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுதிய பகிரங்க கடிதம், இத்தகைய கோரிக்கையை ஏற்க

னவே முன்வைத்துள்ளது. இந்தக் கூட்டமைப்பு தனது கருத்தைக் கூற வாய்ப்பு அளிக்கப்படும் என்று, பிரதமர் அளித்த உறுதிமொழிகள் கண்துடைப்பே என்பதைப் புரிந்து கொண்ட பின்னர், இந்த வேண்டுகோளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுத்தது.

## பொதுத்துறை நிறுவனங்களின் குறைசெயற் திறன் என்ற புனைந்துரை பற்றி

*பொதுத்துறை நிறுவனங்களின் குறைசெயற்திறன் பற்றி தாராளமயமாக்கலை ஆராதிப்பவர்கள், முற்றிலும் உண்மைகளுக்கு மாறாக, பிழையாக எடுத்துரைத்து வருவது, ஒரு தவறான கருத்து பலமடைய உதவி உள்ளது. ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்ட ஆதரவை நிறுத்தியது, நிறுவனங்களை மூடுவது, இன்னும் பிற வடிவங்களிலான ஆதரவை விலக்கிக் கொண்டது ஆகிய, பொதுத்துறை நிறுவனங்களுக்கு எதிரான பெருங் கொள்கை மாற்றங்களை நியாயப்படுத்த இவ்வாதம் முன்வைக்கப் படுகிறது. பொதுத்துறை குறை செயற் திறனுடையது. தனியார் துறை மிகு செயற் திறனுடையது என்ற புகை மூட்டத்தை கலைப்பது முக்கியமானது. இரு நிலைகளில் இப்பொய்மை வாதத்தை முறியடிக்க முடியும்.*

### அ. உண்மைகள் சுடுகின்றன.

*உண்மையில் இந்த வாதமே கவைக்குதவாதது. பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு பற்றிய 1990-91-ம் ஆண்டுக்கான அரசாங்க விவரங்கள் கூறுவதாவது; ''229 நிறுவனங்களில் 131 லாபமீட்டின. லாபமீட்டியவைகளில் செய்யப்பட்ட முதலீடு மொத்த பொதுத்துறை முதலீட்டில் 85.5 சதவிகிதம்; மொத்த பணியாளர்களில் 64.4 சதவிகிதத்தினர் இவற்றில் பணியாற்றுகின்றனர். (இப்போது மொத்த நிறுவனங்கள் 236). லாபமீட்டும் நிறுவனங்களின் நிகர லாபம் ரூ.5,431.42 கோடி (மொத்த லாபம் ரூ.11,358 கோடி. பிற நட்டம் தரும் நிறுவனங்களின் மொத்த நட்டம் ரூ. 3063.68 கோடி (இதில் நட்டத்தில் இயங்கியதால் அரசு மேற்கொண்ட தனி*

யார் நிறுவனங்களும் அடங்கும்). மறு புறத்தில், 1990-91-ல் தனி யார் துறையில் உள்ள 1016 லாபமீட்டும் கம்பெனிகளின் நிகர லாபம் ரூ.2976.4 கோடி (மொத்த லாபம் ரூ.6615.2 கோடி.) இவற்றில் 227 கம்பெனிகள் 82.6 சதவிகித லாபத்துக்கு உரியவை. எனவே, லாபமீட்டும் நிறுவனங்களின் எண்ணிக்கை விகிதம் தனியார் துறையைக் காட்டிலும் பொதுத்துறையில் அதிகமாக உள்ளது. ஏற்றுமதிகளைப் பொருத்தவரை பொதுத்துறையின் பங்கு 21.8 சதவிகிதம். சிறுவிகிதத் துறையினுடையதாகவும் சேர்த்தால் இவை இரண்டின் பங்கு 49.75 சதவிகிதம். "(1991-92 ஆண்டுக்கான பொதுத்துறை சர்வே மற்றும் பொருளாதார நிலைமை பற்றிய சர்வே.)"

முன்னாள் திட்டக் கமிஷன் உறுப்பினர் ஹைடன் பாஹ்யா கூறுவதாவது: "1981-82 முதல் 1985-86 பரிசீலனைக் காலத்தில் மாறா மூலதனச் சுமை - இது நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இல்லை — உயர் ஊதியங்கள் மற்றும் கட்டுப் படுத்தப்பட்ட விலைகள் - இவையும் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இல்லாதவை - ஆகிய பிரச்சினைகள் இருந்த போதிலும் பொதுத்துறையின் செயற் திறன் எந்த விதத்திலும் தனியார் துறையினுடையதை விடக் குறைந்ததல்ல.

'பெல்' நிறுவனமானது உலகின் அதிக லாபமீட்டும் 15 நிறுவனங்களில் ஒன்று. பிற 14 நிறுவனங்கள் மேலை நாடுகளில் உள்ளன. பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தை, இருவழி உதவித் திட்டங்கள் வாயிலாக ஏற்றுமதிகளுக்கான அரசாங்க ஆதரவு ஆகியவையின்றி இந்த 14 நிறுவனங்களில் எவையுமே நீடித்திருக்க முடியாது என்பது முக்கியமான விசயமாகும். பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தை அல்லது வாங்கும் நாடுகளுக்கான ஏற்றுமதிக்கான கடனுதவி இன்றி 'பெல்' மட்டும் கொழிக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கம் எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்? நிதி உதவியுடன் பல மின் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகையில், இரு தரப்பு உதவி சம்மந்தப்பட்டிருக்கும் திட்டங்களில் கூட, போட்டியிடுவதற்கு வாய்ப்புள்ள வேலைகளில் கூட, 'பெல்'லுக்கு வாய்ப்புகள்

மறுக்கப்படுகின்றன. சிறந்த நிலையிலுள்ள ஒரு பொதுத்துறை நிறுவனத்தை, சர்வதேசப் புகழ் பெற்ற ஒரு நிறுவனத்தை, நலிவடைந்த நிறுவனமாக்கும் வழியல்லவா இது.

அரசு ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டுமென திட்டமிட்டே உலக வங்கியும் சர்வதேச நிதியமும் வற்புறுத்துகின்றன. தொழில் நுட்ப ரீதியிலும் வணிக ரீதியிலும் போட்டியிடும் திறனுள்ள இந்தியப் பொதுத்துறையை போட்டியிட இயலாதவாறு செய்து, தேக்கத்தில் வீழ்ந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியச்சந்தையை தங்கு தடையின்றி திறந்து விடும் வழியே இது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 5 சதவிகிதத்துக்கும் கூடுதலாகாதவாறு வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறை இருக்க வேண்டும் என்பதும், பொதுத் துறைக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஆதரவை விலக்குவதை வற்புறுத்துவது என்பதும், கட்டமைவுச் சீரமைப்பு திட்டம் என்ற உத்திக்கு பொருந்தச் செய்யும் திட்டமிட்ட சீர்குலைவே.

இத்தகைய சீர்திருத்தங்கள் அமுலாக்கப்படுவது, கடந்த 40 ஆண்டுகளாக எச்சரிக்கையுடன் பேணி வளர்க்கப்பட்ட, இறக்குமதி பதிலீட்டுத் தொழில் மய நிகழ்ச்சிப் போக்கிற்கு, முற்றிலும் எதிரானது. இதைத்தான் 1992-93-ம் ஆண்டுக்கான மத்திய வரவு-செலவுத் திட்டம் செய்கிறது. அந்நியத் தனியார் துறையுடன் முற்றிலும் அடிமைத்தனமான முறையில் கூட்டு சேரும் இந்தியத் தனியார் துறையைச் சேர்த்து நாட்டின் பொருளாதாரத்தில் உயர்நிலை வகிக்கச் செய்வதற்கான முயற்சியே இது.

## ஆ. இலாபமடிப்பதா? சமூகக் கடமையா?

லாபம் என்ற வரையறையே கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் பொதுத்துறையில் குறை செயற்திறன் பற்றிய வாதத்தை இன்னொரு வழியிலும் மறுக்கலாம். லாபமீட்டுவது என்ற ஒரே அடிப்படையில் பொதுத்துறையின் குறை செயற்திறன் பற்றிய மதிப்பீடு செய்வது இப்புனைந்துரையை வலுப்படுத்துகிறது. அர

சியல் காரணங்களுக்காக, சில பொதுத்துறை நிறுவனங்கள் உற்பத்திச் செலவுக்கும் குறைவான விலையில், தமது சேவைகளை வழங்குகின்றன. இத்தகைய நிறுவனங்கள் ஆண்டு இறுதியில் பெரிய அளவில் லாப மீட்ட வேண்டுமென எதிர்பார்க்க முடியுமா? வேறு விதமாகக் கேட்டால், லாபமீட்டும் நோக்குடன்தான் பொதுத் துறை நிறுவனங்கள் துவக்கப்பட்டனவா? பின் ஏன் லாபமீட்டாமைக்கு காரணமாக குறை செயற்திறனைக் காட்ட வேண்டும்?

பொதுத்துறை முதலீட்டில் 40 சதவிகிதத்துக்கும் மேல் நிலக்கரி பெட்ரோலியம், மின் உற்பத்தி ஆகிய எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டு உள்ளன. வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் இவற்றை லாபமீட்டும் வாணிப நிறுவனங்களாகக் கருதக் கூடாது; ஆனால் பொருளாதார வளர்ச்சியின் உருத்திரட்சியாகவே கருத வேண்டும். நிலக்கரி மற்றும் எரிசக்தி நிறுவனங்கள் இரண்டுமே நட்டத்துக்கு நடத்தப்படும் தொழில்கள் என்பதை எடுத்த எடுப்பிலேயே அறியலாம். நிலக்கரி அல்லது மின்சார விலையை நினைத்த மாத்திரத்தில் உயர்த்துவது சாத்தியமா? இவற்றை சந்தை சக்திகளின் ஏற்ற இறக்கத்துக்கு ஏற்ப எப்படியோ போகட்டும் என விட்டுவிட முடியுமா? ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவதாக வைத்துக்கொள்வோம். அது தொழில் மற்றும் வேளாண்மை உள்ளீட்டுச் செலவை அதிகரிப்பதுடன் வேறு பாதிப்புகளையும் ஏற்படுத்தும். எடுத்துக்காட்டாக, ஏழைகளை வீட்டு வெளிச்சத்திற்காக, மண்ணெண்ணை அல்லது வேறு எதையாவது தேட நிர்ப்பந்திக்கும். பெருமளவு மண்ணெண்ணை இறக்குமதிச் செலவுகளை அதிகரித்து அன்னிய வாணிபப் பற்றாக்குறை நெருக்கடிக்கு இட்டுச் செல்லும்.

மேலும், இத்தகைய உயிராதாரமானத் துறைகளில் உள்ள நிறுவனங்களை விற்பது - எத்தகைய காப்பு முறைகளும் இல்லாமல் இவ்வாறு செய்வது - எரிசக்தி மற்றும் உர நிறுவனங்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சுயநலப் பேர்வழிகளின் தயவில்

பொருளாதாரத்தை விட்டுவிடும். பொதுத்துறையில் மூலதன உற்பத்தி மற்றும் நடுத்தர ரக உற்பத்தியில், பெருமளவு மூலதனம் முதலீடு செய்யப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்நிலையில், அரசாங்கத்தில் சமீபத்திய முடிவுகள் நாட்டினுடைய முன்னுரிமை வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகளைக் கடுமையாகச் சீர்குலைக்கும்; ஏழை பணக்காரர்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளைத் தீவிரப்படுத்தும்; ஏன் நாட்டையே அன்னியத் தொழில் நுட்பத்தைச் சார்ந்திருப்பதாக மாற்றி விடும். எனவே லாபமீட்டுவதை அடிப்படையாக வைத்து, தனியார் துறையுடன் பொதுத்துறையை ஒப்பீடு செய்வதே கேள்விக்குரியதாகும்.

## தனியார்மயமென்ன மாமருந்தா?

இந்தியப் பொருளாதாரத்தைப் பீடித்துள்ள அனைத்து நோய்களுக்கும் மாமருந்தாக தனியார் மயமாதல் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் உள்ள தனியார் துறையின் சித்திரத்தைக் காண்பது பயனுள்ளது. தனியார்துறையில் உள்ள 4 லட்சத்துக்கு மேற்பட்ட நலிவடைந்த தொழிலகங்கள் மேலும் கவர்ந்திழுக்கும் பல்வேறு திசைகளில் தாறுமாறாக ஓடினால் இவற்றின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இந்நிலையில், ஏசியன் (தென்கிழக்கு ஆசிய நாடுகள் அமைப்பு) பிராந்தியத்தில் உள்ள இந்தியக் கூட்டு நிறுவனங்களில் 80 சதவிகிதம் லாபமீட்டாதவையாக அல்லது ஏதோ ஒப்புக்கு லாபமீட்டுபவையாக உள்ளன என்பதுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும். இந்திய நிதி நிறுவனங்கள் இவற்றுக்கு அளித்துள்ள கடன் ரூ. 14,000 கோடி. இவை வராதக் கடனாக தள்ளுபடி செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளன. இத்துடன் நம் நாட்டில் உள்ள நலிவடைந்த நிறுவனங்களில் உள்ள பொதுக் கடன் ரூ.10,000 கோடிக்கும் மேல், இந்த அளவு பெரியத் தொகை விவாதப் பொருளாகவில்லை அல்லது கவலை அளிப்பதாக இல்லை. மாறாக, நரசிம்மம் கமிட்டி, இத்தொகையை வராத கடனாக கணக்கெடுத்து தள்ளுபடி செய்வதற்காக புதியதொரு நிறுவனத்தை உருவாக்க வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க, தான் கட்டுப்படுத்த இயலாத காரணிகளின் விளைவாக நலிவடைந்த அல்லது நலிவடைந்தவை யாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை ஏன் தண்டிக்க வேண்டும்?

## மறு வேலைவாய்ப்புப் பற்றிய பிரச்சினை

பொதுத்துறையில் 58 நிறுவனங்கள் மூடப்படும் என்று முன்னாள் வணிக அமைச்சர் அமெரிக்காவில் அறிவித்தார். இந்த 58 நிறுவனங்கள் எவை என்று அரசாங்கம் விளக்க வேண்டும். இவற்றில் சில கொள்ளையிடப்பட்ட தனியார் துறை நிறுவனங்கள். கப்பல் போக்குவரத்து, முக்கிய மூலதன (இயந்திர) உற்பத்தி, நுகர் பொருள் உற்பத்தி ஆலைகள் ஆகியவையும் இவற்றுள் உள்ளடங்கி உள்ளன. இவை இறக்குமதி பதிலீட்டுத் தொழில் மயக் கொள்கையின் கீழ் சுயத்தேவையை நிறைவு செய்யும் அடிப்படையில் நிறுவப்பட்டவை. இந்நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ஒவ்வொருவரின் முன்னும் பின்வரும் கேள்வி எழுகிறது: வேறு எங்கு அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு கிடைக்கும்? யார் அவர்களுக்கு மறுபயிற்சி தருவார்கள்? என்பதே.

இத்தகைய பெருமளவிலான ஊழியர் பட்டாளத்தை ஒட்டுமொத்தமாக மறு வேலை வாய்ப்புக்கு, பயிற்சிக்கு மாற்றுவது சாத்தியமா. இத்தகைய ஒரு நடவடிக்கையை யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்று வைத்துக் கொண்டாலும், இந்த அளவு பெரு எண்ணிக்கையிலான தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் இட மாற்றம் செய்வது அவ்வளவு சாதாரணமாக நடைபெறக் கூடிய விசயமா? மூலதன-தொழில் நுட்பச் செறிவு மிக்க கப்பற் கூடங்கள், உர ஆலைகள் போன்றவற்றில் தொழிலாளர் கூட்டுறவு பொருத்தமாகாது என்பதும் உறுதி. நிலவுகின்ற அரசியல், பொருளாதார சமூகச் சூழ்நிலைகளில் இத்தகைய கூட்டுறவு தொழில் நிறுவனங்கள் தப்பிப் பிழைப்பதும் வளமடைவதும் சாத்தியமா? நிச்சயமாக இல்லை!

## உள்நாட்டுத் திறனை வளர்த்தல்: பொதுத்துறையின் பாத்திரத்தை மறுத்தல்

வளரும் நாடுகளிடையில் (சீனா, கொரியா தவிர்த்து), முதல் இடத்தை இந்தியா தொழில் நுட்ப வளர்ச்சியில் வகிக்கிறது. உள் நாட்டு முயற்சிகளைக் கொண்டே இரும்பு ஆலைகள், சிமென்ட் ஆலைகள், மின் திட்டங்கள், உர ஆலைகள், வேதியியல் ஆலை கள், எண்ணை சுத்திகரிப்பு ஆலைகள் ஆகியவற்றை திட்டமிடுதலி லிருந்து கட்டி முடித்து இயக்குவது வரை இந்தியா சுயமாகச் செய்ய முடியும். இவ்வேலைகளில் கால் பகுதி மதிப்புள்ள சில பொருட் களை மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். இந்தியப் பொருளாதாரத்தில் உள்நாட்டு அடிப்படைகளை வளர்த்துள்ளதில் பொதுத் துறைக்கு உரிய இந்த உயிராதாரமான பாத்திரத்தை, இது ஆற்றும் பங்களிப்பை, ஈட்டிய சாதனைகளை தாராளமயதாசர்கள் முழுமையாகக் காண மறுக்கின்றனர். பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத எண்ணை, நிலக்கரி, உருக்கு, விமானப் போக்கு வரத்து, மின் உற்பத்தி, தொலைத் தொடர்பு, சுரங்கத் தொழில், உலோக உற்பத்தி ஆகிய இவை அனைத்தும் பொதுத்துறையில் உள்ளன.

உயிராதாரமான இத்துறைகளில் 49 சதவிகிதப் பங்குகளை லாப வேட்டையாடும் தனியாரிடம், அயல் நாட்டினர் - மற்றும் உள்நாட்டவர்கள் இடம் - விற்பது என்பது நாட்டையே அவர்க ளின் தயவில் விடுவதாகும்; உள்நாட்டு தொழில் வளர்ச்சியின் அடித்தளத்தையே அரித்தெடுத்து விடுவதாகும். 'வெஸ்ட்லண்ட் ஹெலிகாப்டர்களை' வாங்குவது, 'சீமென்ஸ்' - உடனான கூட்டு ஒப்பந்தங்கள், உரத் தேவைகளுக்காக உலகச்சந்தை விலையைக் காட்டிலும் மிகக் கூடுதலான விலையில் பெருமளவிலான உர இறக்குமதிக்காக 'ஸ்னாம் ப்ரொகெட்டி' யுடனான ஒப்பந்தம், உள் நாட்டு உற்பத்தியில் கிடைக்க கூடிய பொருட்களை புறந்தள்ளி விட்டு இருதரப்பு உதவித் திட்டங்கள் என்ற பெயரில் பெருமள வில் இறக்குமதிகளைச் செய்வது - இவை அனைத்தும் அடுத்த டுத்த தொழில்மய இழப்பு நடவடிக்கைகளே.

இப்போக்கு 80-களில் துவங்கியது; இப்போதையக் கொள்கைகளால் வேகமாக முடுக்கி விடப்பட்டு உள்ளது. உண்மையில் அந்நிய வாணிபத்தில் பற்றாக்குறை நெருக்கடி ஏற்பட்டுள்ளதற்கு மிக முக்கியமான காரணமே இந்தப் போக்கை பின்பற்றியதால்தான் என்றால் மிகையாகாது. தொழில் நுட்ப இறக்குமதியை தாராளப்படுத்துவது, ஈக்விட்டி பங்கின் ஓர் அங்கமாக மூலதன இறக்குமதிக்கு அனுமதிப்பது ஆகியவை, தொழில்மயமிழத்தலையும் அந்நிய வாணிபப் பற்றாக்குறையையும் மேலும் தீவிரப்படுத்தவே செய்யும். மாருதிக்குத் தேவையானவற்றை எச்.எம்.டி-யே குறைந்த விலையில், அளிக்கும் நிலையிலிருந்த போதிலும், மாருதியானது, தனது மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டது ஓர் எடுப்பான எடுத்துக்காட்டு. கப்பல் கட்டும் கூடம் போன்றவற்றை மூட்டை கட்டுவது தேவையற்றது மற்றும் குறுகிய நோக்கு உடையது என்பதும், தொழில் மய இழப்புக்காக தற்கொலை முடிவே என்பதும் தெளிவான விஷயமாகும்.

## சிறந்த பொதுத்துறை நிறுவனங்களுக்கு இருண்ட எதிர்காலம்

புதியப் பொருளாதாரக் கொள்கை பொதுத் துறைக்கு வரவு-செலவுத் திட்ட ஆதரவை விலக்குவது, நிறுவனங்களின் பங்குகளை விற்பது, பொதுத் துறை நிறுவனங்கள் தமக்குத் தேவையானவற்றை உள்நாட்டு மூலதாரங்களிலிருந்தே திரட்டிக் கொள்ள வேண்டுமென நிர்ப்பந்திப்பது ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது. இக்கொள்கை ஒரு சில ஆண்டுகளிலேயே பெல் போன்ற சிறந்த நிறுவனங்களை நலிவடைந்தவை என்ற நிலைக்கு வீழ்த்தி, இவற்றை தொழில் மற்றும் நிதி மறுகட்டுமான வாரியத்தின் கைகளில் தள்ளிவிடும். இதுதான் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகப் போகிறது.

நலிவடைந்தவை என பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டு உள்ளன. உண் மையோ வேறானது. அவற்றில் பல, வெவ்வேறு காரணிகளால் நலிவடைந்தவையாக ஆக்கப்பட்டவை. சில விலை நிர்ணயிப்புக ளில் நலிவடைந்தவை. பிடிஐஎல் உர உற்பத்தி ஆலோசனை நிறுவ னம் (இத்தாலியின் - மொ.ர்.) ஸ்னாம் ப்ரொகெட்டி-யின் நலனுக் காக திட்டமிட்டே பலியிடப்பட்டது. உர ஆலைகளில் நலிவடைந் தவை என்று சமீபத்தில் அறிவிக்கப்பட்டவை பற்றி ஆய்தல் அவசி யம். ஒரு டன் யூரியா உற்பத்தியை அதிகரிக்க ரூ.2000 முதல் 5000 வரை முதலீடு செய்தால் இப்போது உள்ள ஆலைகளிலேயே விரை விலேயே உற்பத்தியை சரிப்படுத்தலாம். ஆனால் ஒரு டன் உற் பத்தி செய்ய ரூ.17,000 முதலீடு என்ற பெருமளவு செலவு பிடிக்கும் திட்டங்களையே அரசு அங்கீகரித்துள்ளது. தல்ச்சேர் மற்றும் ராம குண்டத்தில் உள்ள உர ஆலைகளுக்கு 20 மெகா வாட் மின் சக்தி ஒழுங்காக கிடைக்கச் செய்தால் போதும், அவற்றின் நலிவு நீங்கி நன்கு இயங்கும்.

இதில் ஒரு சோகமான விசயம் உள்ளது. தல்ச்சேர் உர ஆலைக்கு 2 கி.மீ தொலைவில் 800 மெகா வாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் மற்றொரு பொதுத்துறை நிறுவனமாக நல்கோ (NALCO) உள்ளது. ஒரு சாதாரண நிர்வாக உத்தரவு மூலம் உர ஆலைக்கு மின்சாரம் அளிக்க முடியும். ஆனால் இது நடந்தபாடில்லை. இது போன்ற சாதாரண நடவடிக்கைகளை மேற்கொண்டால் சில நலிவ டைந்து கொண்டிருக்கும் நிறுவனங்களைச் சிறப்பாக இயங்கச் செய்யலாம். இதனால் அன்னியச் செலாவணி பிரச்சினையும் இல்லை. ஆனால் பொதுத்துறை நிறுவனங்களை இழுத்து மூடு வது என்று முடிவெடுப்பதற்கு முன் இது போன்ற சிறு விசயங்க ளைப் பரிசீலிப்பதற்குக் கூட அரசாங்கத்துக்கு மனமில்லை என் பதை யாரும் காணலாம்.

## பொதுத்துறை நிறுவனங்கள் சுயமாக இயங்க வேண்டும்

பொதுத்துறை நிறுவனங்கள் சுயமாக இயங்க அனுமதிப்பது என்பதே இல்லை என்பது உண்மையிலேயே ஒரு சோகமான விசயம். இன்றுள்ள முக்கிய பிரச்சினை பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடுகளில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அடிக்கடி தலையிடுவதுதான். எந்த நேரத்தில் பார்த்தாலும் பல பொதுத் துறை நிறுவனங்களில் தலைமை நிர்வாகி இருக்க மாட்டார்; பல சந்தர்ப்பங்களில் இயங்கும் இயக்குனர்கள் இருப்பதில்லை. இதனால் நிர்வாகத்தில் ஒரு தொடர்ச்சியோ முன்கூட்டி திட்டமிடுதலோ இருப்பதில்லை. சில நிறுவனங்களில் அய்.ஏ.எஸ். அதிகாரிகள் நிர்வாகிகளாக உள்ளனர்; அதிகாரிகளுக்கு இது ஓர் இடைக்காலப் பணியாக உள்ளது. இதனால் அவர்கள் நிறுவனத்தில் எதிர்காலத்துடன் தம்மைப் பிணைத்துக் கொள்வது இல்லை. நிர்வாகத்தில் இவ்வாறு அடிக்கடி செய்யப்படும் மாறுதல்கள் இடைநிலை நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்களை ஊக்கமிழக்கச் செய்கின்றன. இது தொடர்பாக செய்யப்பட்ட பல கமிட்டிகளின் பரிந்துரைகளை யாரும் கண்டு கொள்வதே இல்லை. குறைந்த பட்ச சுய இயக்கம் கூட மறுக்கப்பட்ட நிலையில்தான் அவை இலாபத்தை ஈட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இது சரிதானா?

### மாற்றுவழி

இப்போது நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில், இலாபத்தை தனியார்மயமாக்குவது மற்றும் இழப்புகளை தேசியமயமாக்கும் எந்தக் கொள்கையும், சுயசார்புக் கொள்கையை நீர்த்துப் போகச் செய்து தொழில்மயமானதின் பலன்களை அழிக்கும் எந்த நடவடிக்கையும், பொதுத்துறையை சட்டவிரோதமான முறையில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலாளிகள்

கைப்பற்றுவதைச் சாத்தியமாக்கும் எத்தகைய முடிவும், மேலும் அழிவையே ஏற்படுத்தும்.

நாட்டில், இப்போது, ஒரு கையறு நிலை உள்ளது. பொருளாதார நிலையை நன்னிலைக்குக் கொண்டு வருவதற்காக என மேற்கொண்டு உள்ள தனியார்மயசார்பு கொள்கைகள் மட்டுமே ஒரே தீர்வு எனப் பலரையும் அரசு நம்பச் செய்துள்ளது. இது மிகவும் துரதிருஷ்டமானது. சரியான மாற்று வழிகள் உள்ளன. இவை சரியாகப் பின்பற்றப்பட்டால் பரந்துபட்ட இந்திய மக்கள் - மேட்டுக் குடியினர் மட்டுமல்ல - பலன் அடைய முடியும்; பரந்துபட்ட மக்களை 'வயிற்றைக் கட்டச்' செய்வதும், ஆனால் அதே வேளையில் ஒரு சிறு பிரிவினர் சுகபோகமாக வாழ்வதும் என்ற நிலைமையை இம்மாற்று வழி ஏற்படுத்தாது. நீதியையும் சமத்துவத்தையும் அடைவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொதுக் கருத்தை அடையும் திசையிலான தீர்மானகரமான அரசியல் முடிவே இன்றையத் தேவை. இந்த மாற்று வழித் திட்டம் பின்வருமாறு:

★ நாட்டில் ஏற்கனவே கட்டியமைக்கப்பட்டு உள்ள தொழில் நுட்பம் மற்றும் உற்பத்தித் திறனை முழுமையான அளவில் பயன்படுத்தல்.

★ பொது நிதியிலிருந்து செயல்படும் அனைத்து நிறுவனங்களுக்கு - கல்வி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, உற்பத்தி நிறுவனங்களுக்கு - இடையில் நெருக்கமான கூட்டுறவு.

★ அந்நிய வாணிபப் பற்றாக் குறையை ஈடு செய்வதற்கு ஏற்றுமதி வருவாய்களுக்கு முன்னுரிமை அளிப்பதை விட, இறக்குமதியை தீவிரமாகக் குறைப்பதை உத்திரவாதப் படுத்தும் கொள்கையை உறுதி செய்வது.

★ நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்பை அடிப்படையாகக் கொண்டு, பொதுத்துறை சுயமாக இயங்குவதற்கான கொள்கையைக் கடைபிடித்து, அவற்றை மக்களுக்கு பொறுப்பாக்குவதை உறுதி செய்வது.

★ தனியார் துறையில், தொழிலாளர்களை நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்து, அதை, சமூகப் பொறுப்புள்ளதாக்குவது; இதன் மூலம் தொழில் நலிவைத் தடுத்து, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அளித்த பொது நிதியைப் பாதுகாப்பது


எப்படியிருப்பினும், பாதிப்படையும் மற்ற அக்கறையுள்ள அனைத்து தரப்பினரும் பங்கேற்கும் விவாதத்தின் மூலம் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதன் வாயிலாகவே எந்தப் பொருளாதாரக் கொள்கையும் உருவாக முடியும். கட்டாயப்படுத்துவது - பொய்ப் பிரச்சாரத்தின் வாயிலாக இதை அடைய முடியாது.

## முடிவுரை

முடிவாக, மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின் ஒரே நோக்கம், பொதுத்துறையைப் பற்றி அவ்வளவாகத் தெரிய வராத உண்மைகளை வலியுறுத்துவதே அல்லாமல், தனியார்மயத்துக்கு எதிரான பொதுத்துறையில் திறனற்ற நிறுவனங்கள் எதுவுமே இல்லை என்பதோ அல்லது அவற்றை மறுநிர்மாணிப்பது அவசியமே இல்லை என்பதோ அல்லது மிக மோசமானவற்றை மூடுவதையோ மறுப்பது எமது நோக்கமல்ல.

பொருளாதாரத்தில் பொதுத்துறையின் பாத்திரத்தை வெட்டிக் குறைப்பது தொடர்பாக அரசாங்கத்தின் அவசர கோலமான முடிவுகளைப் பற்றி எடுத்துரைப்பதையே நாங்கள் செய்கிறோம். எல்லா வழக்குகளிலும் இலாமீட்டுவன


அல்லது நட்டமடைவன என்ற அளவு கோலைத் கொண்டு மட்டும் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடுகளை மதிப்பிடும் அடிப்படை சரியல்ல என்றே வாதிடுகிறோம். இத்துடன் ஒவ்வொரு நிறுவனமும் முழுமையாக மதிப்பி டப்பட வேண்டும். அதன் பின்னரே அவற்றை மூடுவது அல்லது தனியார் முதலீட்டாளர்களுக்கு மாற்றுவது என்று முடிவெடுக்கப்பட வேண்டும். இந்தியத் தொழிலதிபர்கள் சாராம்சத்தில் வணிக மனோ நிலையைக் கொண்டு உள்ள னர்; விரைந்து இலாப்மீட்டுவதற்காக அவர்கள் உள்நாட்டுத் தொழில் நுட்ப வளர்ச்சிக்குப் பதில் அந்நிய இறக்குமதியைச் சார்ந்திருப்பது என்ற குறுக்கு வழியையே அடிக்கடி மேற் கொள்ளுகின்றனர் — இந்த உண்மையை அரசாங்கம் நினை வில் கொண்டாலே போதுமானது.



உழைப்பவர் குரல் கொடுத்தால்
சிறைபடுமோ சேவல்!

பொறியியல், உலோகங்கள், வேதியியல், மருந்து உற் பத்தி என்று எதை எடுத்தாலும் அந்நியக் கூட்டற்ற நிறுவனங் களைக் காண்பது அரிது. இவை தொலை நோக்கிலான சுய சார்புத் தொழில் வளர்ச்சியின் வேர்களைத் துண்டிக்கின்றன. இது மட்டுமின்றி இத்தகைய அந்நியத் தொழில் நுட்பத்தைச்

சார்ந்திருப்பது மித மிஞ்சிய மூலதன இறக்குமதியைக் குறிக்கிறது; விற்பனையில் நெகிழ்வின்மையை உருவாக்குகிறது; மாற்று விலை குறித்தலின் மூலமாகச் செல்வம் மறைமுகமாக வெளியேற வழிவகுக்கிறது. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியம், அதன் ஆதரவாளர்களைப் பொறுத்த வரையில், தொழில்மயம் என்பதே இந்தியாவின் மேட்டுக் குடியினரின் நுகர்வுக்காக, அன்னிய உதவியுடன் நுகர்வுப் பொருட்களையும் நீண்ட கால உபயோகப் பொருட்களையும் உற்பத்தி செய்வதுதான். உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தை அடியொற்றிச் செல்லும் ஆர்வலர்களுக்காக, அவர்களது நல் விருப்பங்களுக்காக இறக்குமதி பதிலீட்டுக் கொள்கையின் 40 ஆண்டு கால எதார்த்தத்தை - அனுபவத்தை - ஒதுக்கித் தள்ளி விட முடியுமா?



## அட்டவணை-1


### தனியாருக்குப் பங்குகள் விற்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலைமை
(ரூபாய்கள் கோடிகளில்)

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | செலுத்தப்பட்ட மூலதனம் | நிகர லாபம் 1991-92 | சேமிப்புகள் மற்றும் உபரிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஹிந்த் பெட்ரோலியம் | 63.84 | 120.04 | 729.69 |
| 2. | பாரத் பெட்ரோலியம் | 50.00 | 127.81 | 616.11 |
| 3. | பாரத் எர்த் மூவர்ஸ் | 30.00 | 46.14 | 320.05 |
| 4. | விதேஷ் சன்ச்சார் | 60.00 | 8.58 | 285.19 |
| 5. | பி.எச்.இ.எல் | 244.76 | 164.52 | 292.05 |
| 6. | ஷிப்பிங் கார்ப்பரேஷன் | 216.23 | 95.25 | 308.10 |
| 7. | ஐ.பி.சி.எல் | 186.00 | 57.25 | 510.62 |
| 8. | பாரத் எலக்ட்ரானிக்ஸ் | 80.00 | 34.25 | 182.84 |
| 9. | இந்தியன் டெலிபோன் | 87.69 | 36.07 | 215.62 |
| 10. | ஹிந்த் ஆர்கனிக்ஸ் | 49.35 | 31.97 | 121.28 |
| 11. | மெட்ராஸ் ரிஃபைனரி | 96.58 | 50.55 | 128.30 |
| 12. | எம்.டி.என்.எல். | 600.00 | 95.80 | 51.66 |
| 13. | ஹிந்த் சிங்க் | 403.73 | 84.05 | 212.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | பொங்கைகோன் ரிஃபெனரி | 199.82 | 48.50 | 138.94 |
| 15. | சி.எம்.சி. | 15.15 | -6.78 | 5.72 |
| 16. | ஹிந்த் போட்டோபிலிம்ஸ் | 119.53 | 1.98 | 36.49 |
| 17. | ஆண்ட்கு யூல் | 7.90 | 3.73 | 23.46 |
| 18. | கொச்சின் ரிஃபைனரி | 68.93 | 60.84 | 112.47 |
| 19. | எஸ்.டி.சி. | 30.00 | 23.13 | 296.84 |
| 20. | ராஷ்ட்ரிய கெமிக்கல் | 551.69 | 40.76 | 326.90 |
| 21. | எச்.எம்.டி. | 78.56 | 14.15 | 173.60 |
| 22. | எஸ்.ஏ.ஐ.எல் | 3985.89 | 244.69 | 1127.51 |
| 23. | நெய்வேலி லிக்னைட் | 1435.82 | 95.24 | 679.61 |
| 24. | ஹிந்த் கேபிள் | 45.84 | 2.32 | 79.56 |
| 25. | என்.எ.எல்.கோ. | 1288.62 | 71.94 | 231.00 |
| 26. | நேஷனல் பெர்டிலைசர்ஸ் | 491.58 | 29.74 | 223.46 |
| 27. | எஃப்.எ.சி.டி. | 239.31 | 23.37 | 59.20 |
| 28. | ட்ரெட்ஜிங் கார்ப்பரேஷன் | 28.00 | 14.77 | 84.59 |
| 29. | எம்.எம்.டி.சி. | 50.00 | 77.28 | 300.07 |
| 30. | ஐ.ஆர்.ஆர்.சி.ஓ.என். | 4.95 | 8.97 | 180.15 |
| | மொத்தம் | 10,884.00 | 1730.12 | 8753.21 |

ஆதாரம்: பொதுத்துறை நிறுவனங்கள் பற்றிய சர்வே 1990-91

குறிப்பு: 1 முதல் 14 வரையிலான நிறுவனங்களின் பங்குகள் 20 சதவிகிதம் வரை விற்கப்பட்டுள்ளன; 15 முதல் 17 வரையிலான நிறுவனங்களின் பங்குகள் 10 முதல் 20 சதவிகிதம் வரை விற்கப்பட்டுள்ளன; மற்றவற்றின் பங்குகள் 10 சதவிகிதத்திற்கும் குறைவாக விற்கப்பட்டுள்ளன.



## எமது
## பிற வெளியீடுகள்

- மார்க்சிய மூலநூல்களுக்கு
  வாசகர் வழிகாட்டி - மாரிஸ் கார்ன் போர்த் ரூ. 35.00
- வதைக்கப்படும் மக்களும்
  புதைக்கப்படும் உரிமைகளும்
  கோவிந்த முகோத்தி ரூ. 7.00
- தலித் அரங்கியல் - கே. ஏ. குணசேகரன் ரூ. 16.00

## எம்மிடம் கிடைக்கும் பிற வெளியீடுகள்

- பெல் (BHEL) ஐ அழிக்கும்
  தேசத்துரோக காங்கிரசின் புதிய மின் கொள்கை -
  PCSU ரூ. 5.00
- மண்ணை விற்று முன்னேற்றமா?
  ம.க.இ.க. ரூ. 3.00

மற்றும்
முற்போக்கு நூல்கள், பத்திரிகைகள், ஒலிநாடாக்கள்

கிடைக்குமிடம்

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, ஔலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை, சென்னை - 600 002




பெல்-பைப்பிங் சென்டர் ஸ்டாஃப் யூனியன் (PCSU)

தமிழ்நாடு